இதற்கு ஓர் ஒத்திசைவு வருகிறபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய திட்டத்தை எடுத்துக்கொள்வதற்கு முயற்சிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 7, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் நா. எழிலன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

7—

மாற்றுத்திறனாளிகள் பயனுறு கட்டுமானச் சான்றிதழ்

***51712—டாக்டர் நா. எழிலன்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதிய கட்டுமானங்களுக்கு இசைவளிக்கும் முன் மாற்றுத்திறனாளிகள் எளிதில் வந்து செல்லும் கட்டுமானம் இருப்பதற்கான சான்றிதழைக் கட்டாயமாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாற்றுத்திறனாளிகளின் வசதிகளை முன்னிட்டு, தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டட விதிகள் 2019, விதி எண் 43 (a) முதல் (d) வரை உள்ள விதிகளின்படி 2,000 சதுர அடிக்கு மேல் உள்ள அனைத்து கட்டடங்களிலும் மாற்றுத் திறனாளிகள் வந்து செல்கின்ற வகையில் அமைக்கப்பட வேண்டுமென்ற விதிகள் உருவாக்கப்பட்டு, அந்த விதிகளின்படி சமர்ப்பிக்கப்படும் வரைபடங்களுக்கு அனுமதி கொடுக்கப்படுகிறது. அந்த வரைபடத்தின்படி அவர்கள் அந்தக் கட்டடத்தைக் கட்டவில்லையென்றால், அந்தக் கட்டடத்தைப் பயன்படுத்த முடியாத அளவிற்கு அதற்கு seal வைக்கப்படுகிறது. அவர்களுக்கு Completion Certificate கொடுக்கப்படுவதில்லை. எனவே, மாற்றுத்திறனாளிகளுக்கு முழுமையாகப் பயன்படுகின்ற வகையிலே இந்தச் சட்டம் அமலாக்கப்பட்டு வருகிறது

2024 பிப்ரவரி 13]
என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் நா. எழிலன் அவர்கள்.*

டாக்டர் நா. எழிலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயகம் என்பது பெரும்பான்மையின மக்களுக்கு மட்டுமல்ல; ஜனநாயகம் என்பது சிறுபான்மையின மக்கள், விளிம்புநிலை மக்களுக்கு சுயமரியாதை, தரமான வாழ்க்கையை அமைப்பதே ஆகும். அந்தக் கொள்கையில் வெற்றிநடை போடும் கழகத் தலைவர் வழிகாட்டுதலுடன் நடைபெறும் திராவிட மாடல் அரசு, கட்டுமானங்கள் கட்டப்படும்போது, கட்டுமானப் பணிகளுக்காக கிட்டத்தட்ட 13 துறைகளிடம் ஒப்புதல் பெற வேண்டிய நிலையிருக்கிறது. கட்டுமானம் கட்டுபவர்கள், 14–ஆவதாக நம் கழக அரசு அமைத்த மாற்றுத்திறனாளி ஆணையரிடம் ஒப்புதல் பெற வழிவகை செய்ய வேண்டுமா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* NOC *வாங்குவதற்கு நிறைய* department*–களுக்கு போக வேண்டியிருக்கிறது என்ற பெரிய* complaint *இருந்து கொண்டிருக்கிறது. எனவேதான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கு* Single Window System *என்ற முறையைக் கொண்டுவந்து, அதிலேயே எல்லாவற்றையும் பார்த்து, 60 நாட்களுக்குள்ளாக அனுமதி அளிக்க வேண்டுமென்ற திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். இதைப் பொறுத்தவரை சட்டம் இருக்கிறது. அந்த விதிகளின்படி மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்துகின்ற அளவிற்குக் கட்டடத்தை விதிகளுக்குட்பட்டு அமைக்க வேண்டும். அப்படி அமைக்கவில்லையென்றால், அந்தக் கட்டடத்தை அவர்கள் பயன்படுத்த முடியாது. அவர்களுக்கு* CC–Completion Certificate *வழங்கப்படுவதில்லை. எனவே, சம்பந்தப்பட்ட துறையே முழுமையாக பார்த்துவிட முடியும் என்ற அந்த நம்பிக்கையின் காரணமாக கூடுதலாக இன்னொரு இடத்தில் அனுமதி வாங்க வேண்டிய அவசியமில்லை. அந்தச் சட்டத்தை முழுமையாக நாமே அமல்படுத்தலாம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் நா. எழிலன் அவர்கள்.

முற்பகல் 11–20

டாக்டர் நா. எழிலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றுத்திறனாளிகளுக்குக் கல்வித் துறையில் இடஒதுக்கீடு அளிக்கிறோம். வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு அளிக்கிறோம். அதேபோல், வீட்டுவசதி வாரியத்தில் வீடுகள் கொடுக்கும்போது 1 சதவிகிதம் அவர்களுக்கு இடஒதுக்கீடு வழங்கப்படுகிறது. அது 3 அல்லது 5 சதவிகிதமாக அதிகப்படுத்தப்படுமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த demand-ஐப் பொறுத்து இடஒதுக்கீட்டை அதிகப்படுத்த வேண்டுமா என்பது குறித்து கண்டிப்பாக ஆய்வு செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திரு. T.M. தமிழ்செல்வம் அவர்கள், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

8—

பேருந்து வசதி

***61962—திரு. T.M. தமிழ்செல்வம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை ஒன்றியம், ஊத்தங்கரையிலிருந்து கல்லாவி வழியாக பெரிய கொட்டகுளம், திருவனப்பட்டி, ஆனந்தூருக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,